www.freetnbooks.com

Reg. No.: | | | | | | |

# இரண்டாம் பருவப் பொதுத் தொகுத்தறித் தேர்வு-2025

## வகுப்பு - 6

காலம் : 2.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்:60

### பகுதி - 1

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5

1. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது ..........
அ) வம்பு ஆ) அமைதி இ) அடக்கம் ஈ) பொறை
2. விழாக்காலங்களில் வீட்டின் வாயிலில் மாவிலையால் ......... கட்டுவர்.
அ) செடி ஆ) கொடி இ) தோரணம் ஈ) அலங்கார வளைவு
3. நிலையான செல்வம் ........
அ) தங்கம் ஆ) பணம் இ) ஊக்கம் ஈ) ஏக்கம்
4. போர்க்களத்தில் வெளிப்படும் குணம் .....
அ) மகிழ்ச்சி ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை
5. போகித்திருநாள் எந்த மாதத்தின் இறுதி நாளில் கொண்டாடப்படுகிறது?
அ) பங்குனி ஆ) தை இ) மார்கழி ஈ) கார்த்திகை

ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. 5 x 1 = 5

6. முடியரசனின் இயற்பெயர் ..........
7. உதித்த என்ற சொல்லுக்குரிய எதிர்ச்சொல் .........
8. பொருள்களை விற்பவரை .......... என்பர்.
9. திருக்குறளை இயற்றியவர் ..........
10. உயிர் எழுத்துகளின் எண்ணிக்கை ..........

இ) பொருத்துக. 4 x 1 = 4

11. விடிவெள்ளி – பஞ்சு மெத்தை
12. மணல் – ஊஞ்சல்
13. புயல் – போர்வை
14. பனிமூட்டம் – விளக்கு

### பகுதி - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி: 5 x 2 = 10

15. நாம் யாருடன் நட்பு கொள்ள வேண்டும்?
16. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?
17. எது தீமையானது என்று வள்ளுவர் கூறுகின்றார்?
18. இன எழுத்துகள் என்றால் என்ன?
19. சிறு வணிகப் பொருட்கள் யாவை?
20. மீனவர்கள் தமது வீடாகவும் செல்வமாகவும் கருதுவன யாவை?

### பகுதி - 3

2 x 2 = 4

அடிமாறாமல் எழுதுக.

21. வெள்ளத்து – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
22. சொல்லுக – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பகுதி - 4

7 x 2 = 14

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி

23. கலைச்சொல் தருக.
அ) merchant ஆ) consumer

Kindly Send Me Questions & Answer Keys to Us: www.freetnbooks.com | FREETNBOOKS
Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



24. பொருள் கூறுக.

அ) நந்தவனம் ஆ) நட்டல்

25. இடம் மாறிய சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

உள்ளுவது உயர்வுள்ளல் எல்லாம் மற்றது
தள்ளாமை தள்ளினும் நீர்த்து.

26. அகர வரிசைப்படுத்தி எழுதுக.

நீலம், கோமேதம், மாணிக்கம, வைரம், பவளம், வைடூரியம், புட்பராகம், முத்து, மரகதம்

27. பிழைகளை திருத்தி எழுதுக.

அ) வனிகம் ஆ) தெண்றல்

28. சேர்த்து எழுதுக.

அ) பண்டம் + மாற்று ஆ) அடிக்கும் + அலை

29. பிரித்து எழுதுக.

அ) நானிலம் ஆ) மூச்சடக்கி

30. தொகைச்சொல்லை விரித்து எழுதுக.

முக்கனி

## பகுதி – 5

இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி **2 x 4 = 8**

31. தாய், தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?
32. நாம் எத்தகைய சொற்களைப் பேச வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?
33. காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?
34. பழந்தமிழர் ஏற்றுமதி, இறக்குமதி செய்த பொருள்கள் எவை?

## பகுதி – 6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி **2 x 5 = 10**

35. பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்றதற்கு பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.
36. ஆசாரக்கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?
37. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதர்களுக்குத் தேவையான பொருள்களைக் கிடைக்கச் செய்வதை வணிகத்தின் நோக்கங்களுள் ஒன்று. ஓர் இடத்தில் உற்பத்தியாகும் பொருள்களைப் பல இடங்களுக்கு அனுப்புவதும் பல இடங்களில் கிடைக்கும் பொருள்களை ஓர் இடத்தில் கிடைக்கச் செய்வதும் வணிகம் ஆகும்.

கிடைக்கும் பொருள்களின் மதிப்பைக் கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகம் ஆகும். சான்றாகக் கல் என்பது விற்பனை பொருளன்று. ஆனால் அதனைச் செதுக்கிச் சிலையாக மாற்றலாம். உதிரும் கல்தூளைக் கோலமாவாக மாற்றலாம். இதனை மதிப்புக் கூட்டுதல் என்பர்.

அ) கிடைக்கும் பொருள்களின் ........ கூட்டிப் புதிய பொருளாக மாற்றுவது சிறந்த வணிகம் ஆகும்.

அ) அளவை ஆ) மதிப்பை இ) எண்ணிக்கையை ஈ) எடையை

ஆ) சிலை செதுக்கப்படும்போது உதிரும் கல்தூளை .......... மாற்றலாம்.

இ) வணிகத்தின் நோக்கம் என்ன?

ஈ) மதிப்புக் கூட்டுதல் என்றால் என்ன?

உ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பை எழுதுக.

Kindly Send Me Questions & Answer Keys to Us: www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner